Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 147 / 2022

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | முத்துலட்சுமி | Calling: | செவிலியர் |
| Father's Name: | க/பெ அறிவொளிமணி | Religion: | இந்து |
| Village: | சங்கராபுரம் | Age: | 30 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.02.2024

SIGN :

(எதிரிகள் இருவரும் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

எதிரிகள் இருவரையும் தெரியும், 20.05.2022 ம் தேதி இரவு 08.30 மணியளவில் மகளிர் குழுவின் அரசாங்க லோன் தள்ளுபடி பற்றி விவரம் கேட்டபோது தமிழ் இலக்கியா சரியான பதில் சொல்லவில்லை, அதனால் இந்த குழுவில் இருக்க எனக்கு விருப்பம் இல்லை, எனது கணக்கை முடித்து கொடுங்கள் என்று அவரிடம் கேட்டேன், அவ்வாறு முடித்து கொடுக்க இயலாது, உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள் என 2 ம் எதிரி சொன்னார், அதனால் மகளில் குழு அதிகாரியிடம் சென்று முடித்து கொள்கிறேன் என்று கூறிவிட்டு வீட்டிற்கு சென்று விட்டேன், அவ்வாறு வீட்டிற்கு செல்லும் வழியிலே தமிழ் இலக்கியாவின் கணவர் ராஜேஸ் நீ யாருடி தேவிடியா என் மனைவியை கேள்வி கேட்க, என் மனைவி சொல்வதை கேட்டு இருப்பதாக இருந்தால் மட்டும் இந்த குழுவில் இரு, அவள் சொல்வதை கேட்காமல் பிரச்சனை செய்தால்

உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி, நான் வீட்டிற்கு சென்ற பிறகும் தமிழ்இலக்கியா, ராஜேஸ் இருவரும் வீடு புகுந்து என்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார்கள், அதனால் காவல் நிலையம் சென்று புகார்கொடுத்தேன், என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது, **புகார் மனு அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

(கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு வாய்தா கேட்டு அது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.)

**சாட்சி கையொப்பம்**
(ஒம்.) முத்துலட்சுமி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.